Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | புதன்கிழமை | ஆவணி 29 ஆம் நாள் | பக்கங்கள்: 12
கதிர் : 292 | 14 செப்ரெம்பர் 2022 | வள்ளுவர் ஆண்டு 2053 | விலை : ரூ. 50




"எங்களை நினைவேந்த விடாமல் இனிமேல் அரசாங்கம் குழப்பத்தேவையில்லை. இவையே அந்த வேலையை வடிவாப் பாப்பினம் கண்டியளோ"

## கோத்தாபயவால் வழங்கப்பட்ட
# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைமை பதவி இரத்து

யாழ்ப்பாணம், செப். 14
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச வழங்கிய மாவட்ட ஒருங்கிணைப் புக்குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப் புக்குழு இணைத்தலைமைப் பதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. புதிய நியமனங்கள் இடம்பெற்ற பின்னர் அது தொடர்பான வழிகாட்டல் வழங்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல் கள், மாகாண சபைகள் 11




## ரயிலுடன் மோதுண்டு ஒருவர் மரணம்!

வவுனியா, செப்.14
வவுனியா, தாண்டிக்குளத் தில்ரயிலுடன்மோதுண்டு, உயிரிழந்த ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட் டுள்ளது. 11

# சிறிலங்கா மீது ஐ.நா.வில் மிகவலுவான தீர்மானம்

## மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்து

**ஜெனிவா, செப்ரெம்பர் 14**

**ஜெனிவாவில் சிறிலங்கா மீது வலுவான தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுமென்று 4 சர்வ தேச மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளன.** 11

## புளியங்குளத்தில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



வவுனியா, செப்.14
வவுனியா, புளியங்குளத் தில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பஞ்சநாதன் குகேந்திரன் (வயது-44) என்பவரே உயி ரிழந்தவராவார். 11

## பால் புரையேறியதில் 4 நாள் சிசு உயிரிழப்பு!


யாழ்ப்பாணம், செப்.14
பிறந்து நான்கு நாள்களேயான பெண் சிசு ஒன்று பால் புரையேறி உயிரிழந்துள்ளது. 11

## கட்டுப்பாடு இழந்த டிராக்டர் குடும்பஸ்தர் பரிதாபச் சாவு!

### முல்லைத்தீவில் சோகம்

முல்லைத்தீவு, செப்.14
உழவியந்திரம் கட்டுப் பாட்டை இழந்து விபத் துக்குள்ளானதில் குடும் பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளார். 11

### உடைமையில் வாள்
## கலை ஆடும் பூசகர் துணைவியில் கைது



யாழ்ப்பாணம், செப்.14
வட்டுக்கோட்டை, துணைவி யில் நேற்று இரவு 11 வாள் களுடன் ஒருவர் 11

### திலீபனின் நினைவேந்தலை நடத்துவது யார்?
## கட்சிகளிடையே நேற்று நல்லூரில் பிடுங்குப்பாடு!

### தியாகத்தை கொச்சைப்படுத்தாதீர் மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.14
பன்னிரு கோரிக்கை களை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவு தினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், நினைவு தினத்தைக் கடைப்பிடிப் பது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளி டையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை யும், விசனத்தையும் ஏற் படுத்தியுள்ளது.

நேற்று நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீ பனின் நினை 11



## பயங்கரவாதச் சட்டநீக்கம் ஒரு கண்துடைப்பு நாடகமே!

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.14
தேசிய பாதுகாப்புச் சட் டத்தைக் கொண்டுவருவ தன் நோக்கம், பயங்கர வாதத் தடைச் சட்டம் நீக் கப்பட்டுவிட்டது என்று சர்வதேசத்தை ஏமாற்று வதற்கே. தேசிய பாது காப்புச் சட்டம் என்பது பயங்கரவாதத் தடைச்சட் டத்தின் மறு பெயரே - இவ் வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா. 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கக்கோரும் ஊர்திப் பேரணியை எதிர்க்கின்றோம்

## பயங்கரவாதிகளை விடுவிக்க முடியாது
## இனவாதம் கக்குகின்றார் அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, செப். 14

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டு நாட்டைத் துண்டாட நினைக்கும் பயங்கரவாதிகளுக்குத் தீனிபோட முடியாது. சிறைச்சாலைகளிலுள்ள பயங்கரவாதிகளை விடுவிக்கவும் முடியாது. எனவே, பயங்கரவாதிகளையும் வன்முறையாளர்களையும் அடக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டும்.**

இவ்வாறு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கிலிருந்து ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஜெனிவா மாநாடு ஆரம்பமாகியுள்ள நிலையில் நாடு முழுவதிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள கருத்து பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு எதிரான ஜெனிவா நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தான் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் அரசு மிகவும் அவதானத்துடன் செயற்படும்' - என்றார்.

(ஓ-22)

---

கடன் மறுசீரமைப்பு விவகாரம்:

# இந்தியா, சீனா, ஜப்பான் நாடுகளுடன் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, செப். 14

இலங்கைக்கான கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் லசார்ட் நிதி ஆலோசனைக் குழு பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெரும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு இலங்கை கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது.

நான்கு வருட காலப்பகுதிக்காக 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியை இலங்கைக்கு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. எனினும், இந்தக் கடன் திட்டத்தை செயற்படுத்த இலங்கையின் முக்கியமான மூன்று சர்வதேச கடன் கொடுநர்களாக சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளிடம் இருந்து கடன் நிவாரணம் தேவைப்படும். இந்த நிலையில் கடன் மறுசீரமைக்கும் செயன்முறையின் மூலம் அரசாங்கத்துக்கு வழிகாட்ட கடந்த மே மாதம் நியமிக்கப்பட்ட லசார்ட் ஆலோசனை குழு இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது - என்றார். (ச-இ)

---

அதிக விலையில் முட்டை விற்பனை

# 80 வர்த்தகர்களுக்கு வழக்குத்தாக்கல்

நிர்ணய விலையை மீறி அதிக விலக்கு முட்டையை விற்பனை செய்த 80 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. முட்டை ஒன்றுக்கு 50 ரூபாவை கட்டுப்பாட்டு விலையாக நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

பல்வேறு பகுதிகளிலும் முட்டை ஒன்று 60 முதல் 65 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது என மக்களால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரியெல்ல தெரிவித்தார். (ச-இ)

---

# ராஜபக்சக்கள் அமைச்சுப் பதவி ஏற்கக்கூடாது என்று சட்டமில்லையே?

*இப்படிக் கேட்கிறார் நாமல்*



கொழும்பு, செப். 14

அமைச்சுப் பதவி கிடைத்தால் நான் அதை மனதார ஏற்றுக் கொள்வேன். ராஜபக்ச குடும்பத்தில் எவரும் இனிமேல் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்க முடியாது என்று சட்ட ஏதும் உண்டா? - இவ்வாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களையடுத்து ராஜபக்ச குடும்பத்தினர் அனைவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து ஏப்ரல் மாதம் விலகினர். மே மாதம் மஹிந்த ராஜபக்சவும், ஜுன் மாதம் கோத்தாபய ராஜபக்சவும் முறையே பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளிலிருந்து விலகினர்.

பதவி விலகி நாட்டைவிட்டுத் தப்பியோடிய கோத்தாபய மீண்டும் நாடு திரும்பியுள்ள நிலையில் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்ட போது ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த சசீந்திர ராஜபக்சவுக்கு பதவி வழங்கப்பட்டது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் மேலும் சிலருக்கு வழங்கப்படவுள்ளன எனவும் அதில் நாமல் ராஜபக்சவும் உள்ளடக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'எனக்கு எந்த அமைச்சுப் பதவி பொருத்தம் என்பதை ஜனாதிபதிதான் தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் நான் தீர்மானிக்க முடியாது. நான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. எனவே, மீளவும் அமைச்சுப் பதவி கிடைத்தால் அதனூடாக மூவின மக்களுக்கும் மென்மேலும் சேவையாற்றுவேன்' - என்றார். (ஓ-22)

---

# பயங்கரவாத தடைச் சட்டம் இரத்துச் செய்வதற்கு ஆதரவு

*எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 14

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும். அதன் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

[illegible] இரத்துச் [illegible] கோரி யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாந்தோட்டை வரை ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றது. இந்தப் போராட்டத்தில் எமது கட்சியினர் நேரடியாகப் பங்கேற்பார்கள். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று அரசாங்கம் நாடாளுமன்றத்தில் வாக்குறுதி கூட வழங்கியுள்ளது. எனினும், [illegible] செயற்படுகின்றது. இது [illegible]டுக்கு நல்லதல்ல' - என்றார். (ஓ-22)

---

# என்.வி.கியூ கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், செப். 14

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையால் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பவியல் என்.வி.கியூ 4, கணினி வன்பொருள் தொழினுட்பவியலாளர் என்.வி.கியூ. 3 ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பவியல் என்.வி.கியூ. 4 கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்கவேண்டும்.

கணினி வன்பொருள் தொழிநுட்பவியலாளர் என்.வி.கியூ 3 கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும். கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 - 25 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

இந்தக் கற்கைநெறிகள் மாவட்ட அலுவலகம் மற்றும் மானிப்பாய்ப் பயிற்சி நிலையங்களில் இடம்பெறுவதோடு முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும்.

கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், அலைபேசி இலக்கம் மற்றும் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு 0212222363 அல்லது 714553772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் 8 ஆவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

யாழ்ப்பாணம், செப். 14

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீடமானது உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ஒன்றை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வருடம் தோறும் நடத்தி வருகிறது.**

அதற்கமைய இந்த முறை 8 ஆவது உலர்வலய விவசாய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீட மாநாட்டு அரங்கத்தில் "உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்" என்ற முதன்மைத் தொனிப்பொருளில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப்பொருள்களில் 48 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

# எரிவாயு வரிசை இனி இல்லை

## லிட்ரோ நிறுவன தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

லிட்ரோ நிறுவனத்திடம் போதியளவான எரிவாயு கையிருப்பில் உள்ளது.

நாளாந்தம் சுமார் ஒரு லட்சம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இதனால் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி போதியளவான சமையல் எரிவாயு வழங்க முடிகிறது.

லிட்ரோ நிறுவனம் செலுத்த வேண்டியிருந்த கடன் சுமையிலிருந்து விடுபட்டுள்ளது.

உலக வங்கியுடன் இணைந்து பொருத்தமான எரிவாயு வழங்கநர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு எரிவாயுவை இறக்குமதி செய்தமை மற்றும் சிறந்த முகாமைத்துவம் ஆகியவற்றால் எரிவாயு வரிசை முடிவுக்கு வந்துள்ளது- என்றார். (ச-இ)

# திங்கட்கிழமை அரச விடுமுறை

கொழும்பு, செப். 14

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கை முன்னிட்டு எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

எனினும், அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க விடுமுறை தினம் தடையாக இருக்கமாட்டாது என பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பிரபல கண் மருத்துவ நிபுணர் குகதாசன் நேற்று உயிரிழப்பு



யாழ்ப்பாணம், செப். 14

பிரபல கண் மருத்துவ நிபுணரும் சிவபூமி அறக்கட்டளையின் நிதிப் பொறுப்பாளருமான ச.குகதாசன் நேற்று செவ்வாய்க்கிழமை காலை உயிரிழந்தார். (ஒ-14)

# எரிவாயு கொள்வனவு நிதியில் மோசடி; வெளியான தகவல் உண்மையற்றது

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

சமையல் எரிவாயு இறக்குமதி ஒப்பந்தத்தின்படி சர்வதேசத்திடமிருந்து சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்யும் போது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள உலக வங்கியின் நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளது என வெளியான தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் லிட்ரோ நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

சமையல் எரிவாயு கொள்வனவின்போது லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் முழுமையாக வெளிப்படைத் தன்மையையே பின்பற்றுகின்றது.

உலக வங்கியின் கண்காணிப்பின் கீழ் அனைத்து கொள்வனவு மற்றும் பணக்கொடுப்பனவுகளும் இடம்பெறுகின்றன.

சர்வதேசத்திடமிருந்து சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்யும்போது அனைத்து நடவடிக்கைகளும் அரச திறைசேரியின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. இந்தநிலையில் நிதி மோசடியானது எவ்வாறு இடம்பெறும்?

சமையல் எரிவாயு கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளது என வெளியான தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது- என்றுள்ளது. (ச-இ)




**ஆளாளுக்கு ஒவ்வொரு சட்டம் வைக்கிறதில நாங்கள் வலுவிண்ணர் கண்டியளோ.**


மாஸ்க் எண்டொரு பொருள் இருக்கிறதை கிட்டத்தட்ட எல்லாரும் மறந்து கொண்டு போறம். கொஞ்ச மாசத்துக்கு முதல்மட்டும், எங்கட சனத்தின்ர அதி அத்தியாவசியப் பொருளா இருந்த மாஸ்க்கை இப்ப காணவே கிடைக்குதில்லை.

எல்லாம் உந்தப் பொருளாதார நெருக்கடியால வந்த நிலைமை. அதுக்காக இப்ப கொரோனா இல்லையெண்டில்லை. அது தன்ர பாட்டில பரவிக்கொண்டுதான் இருக்கு. அங்க ஒண்டு, இஞ்ச ஒண்டு எண்டு ஆக்களும் கொரோனாவால செத்துக் கொண்டுதான் இருக்கினம். ஆனாலும் இப்ப சனத்துக்கு கொரோனாவில இருந்த பயம் போட்டுது. இப்பிடிப்பட்ட நிலையில, ஒரு மாஸ்க் சம்பவமொண்டைச் சொல்லத்தான் வேணும்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஆடியபாதம் றோட்டில ஒரு அரசாங்க ஆஸ்பத்திரி இருக்கெல்லோ, அங்க இருக்கிற பெரிய டாக்குத்தர் கடும் கண்டிப்பானவர். அங்க ஆர் வருத்தமெண்டு போனாலும், வருத்தத்தை பாக்கிறதுக்கு முதல் அவையள் 'மாஸ்க்' போட்டிருக்கினமோ இல்லையோ எண்டு ஒருக்கா நோட்டம் பாப்பார். மாஸ்க் போட்டவைக்குத்தான் உள்ள போறதுக்கு அனுமதி கிடைக்கும். போடாத ஆக்களிட்ட 'ஓடிப் போய் பக்கத்தில உள்ள கடையளில ஒரு மாஸ்க் வாங்கிப் போட்டுக் கொண்டு வாங்கோ" எண்டு திருப்பி அனுப்பி போடுவார். அப்பிடி திருப்பி அனுப்பப்பட்ட ஆக்களும் அங்கால உள்ள கடையளில ஒரு மாஸ்க்கை வாங்கி முகத்தில கொழுவிக்கொண்டு வந்த பிறகுதான், டாக்குத்தர் அவைக்கு வருத்தம் பார்த்து மருந்து குடுப்பார்.

இப்ப கொரோனா திரும்பவும் கூடிக் கொண்டே போற காலத்தில , இப்பிடி மாஸ்க்கோட வந்தால் மட்டும்தான் அவைக்கு வருத்தம் பாப்பன் எண்டு டாக்குத்தர் சொல்லிறது நியாயம் தான். அதில ஒரு பிழையுமில்லை. ஆனால் இப்பிடி வருத்தக்காரரில காட்டுற கண்டிப்பை அதே டாக்குத்தர் அந்த ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவையிலையும் காட்டத்தானே வேணும்? அதுதானே முறை. என்ன பகிடியெண்டால், அங்க வேலை செய்யிறவை மாஸ்க் போடாமத்தான் அங்க இங்க எண்டு ஆஸ்பத்திரிக்குள்ள ஓடித் திரிஞ்சு வேலை செய்யினம். அப்ப அவைக்கு கொரோனா வராதோ? சிலவேளை கொரோனாவுக்கு ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவையைப் புறிம்பாத் தெரிஞ்சு, அவைக்கு தொத்துறேலை எண்டு அந்த டாக்குத்தர் கண்டுபிடிச்சிருக்கிறாரோ?

வருத்தம் எண்டு போறவைக்கு சிலவேளை அங்க வேலை செய்யிற ஆக்களில ஆருக்கும் கொரோனா இருந்து அவை மூலமா இவைக்கு (வருத்தக்காரருக்கு) அது தொத்தாதோ? வருத்தக்காரருக்கு கண்டிப்பா மாஸ்க் போடச் சொல்லுற டாக்குத்தர் ஏன் அங்க வேலை செய்யிற ஆக்களிட்ட அந்தக் கண்டிப்பைக் காட்டப் பயப்பிடுறார்? எல்லாருக்கும் எளியவர் எண்டால் ஒரு இளக்காரம் தானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவுநாளில்

### அஞ்சலி செய்வோம் வாரீர்



## அமரர் பாக்கியலட்சுமி மார்க்கண்டு

(ஓய்வுநிலை அதிபர், கோண்டாவில் இந்துக்கல்லூரி)

**காலம் : 15.09.2022 நேரம் : காலை 09.00 மணி**

**இடம் : கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய திருமறை மண்டபம்**

பெண் என்ற சொல்லிற்கு முன்னுதாரணமாகவும், சிறப்பையும் கொடுத்து, நீங்கள் எம் வாழ்வில் தந்த அன்பும் அதனால் எமக்கு கிடைத்த மகிழ்ச்சியான நினைவுகள் மற்றும் தைரியமூட்டும் வார்த்தைகள் எமக்கு ஓர் அணையா சுடரொளியாக எமது வாழ்க்கையை வளப்படுத்துகின்றது. உங்கள் வாழ்வில் ஒரு பகுதியாக எம்மை வழிகாட்டிய இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். தொடர்ந்தும் எமக்கு நல் .ஆசீர்வாதத்தை அளிப்பீர்கள் என நன்றியறிதலுடன் நினைவு கூருகிறோம்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வில் அனைத்து ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், உற்றார், உறவினர் அனைவரும் மலரஞ்சலி செலுத்தி ஆத்மசாந்தி பிரார்த்தனை செய்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோஷனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அஞ்சலி செய்ய வாரீர்**

(cs.20716) (2.6)

**குடும்பத்தினர்**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.08.2022 புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

## நமசிவாயம் கதிர்காமநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (16.09.2022) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**246, கைதடி வடக்கு,
கைதடி.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 06 . 1954



உதிர்வு 12 . 09 . 2022

## அமரர் மகாலிங்கம் பாக்கியம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் பாக்கியம் 12.09.2022 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பிராசா-சோதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நல்லம்மா காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் கிருஷ்ணன், தவமணி, தம்பிராசா, நாகேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிக்குமார் (சுவிஸ்), சசிகலா (லண்டன்), சசீந்திரா, பானுஷா (கிராம அலுவலகர், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மஜிந்தினி (சுவிஸ்), சந்திரலிங்கம் (லண்டன்), பகீரதன் (சமூர்த்தி அ.உ யாழ்.மாவட்ட செயலகம்), தவேஸ்வரன் (வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிஷனா (சுவிஸ்), அனொஷ்கா (சுவிஸ்), அபிலாஷ் (லண்டன்), டிஷானந், சிபிஷானந், ஷகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சின்னத்தா இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 9005 876
075 0418 187**

**தகவல் : குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



## திருமதி பரமநாதன் சிசிலியம்மா (செல்வராணி)

றக்கா வீதி கச்சேரியடியைச் சேர்ந்த திருமதி பரமநாதன் சிசிலியம்மா (செல்வராணி) 12.09.2022 அன்று உடுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு, சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகளும் கல்கி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), லின்டா லக்சுமி (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி புஸ்பராணி (பிரான்ஸ்), சகாயராசா (பிரான்ஸ்), யசிந்தா ரஞ்சினி ஆகியோரின் சகோதரியும் டோரா பான்சி (ஆசிரியர், யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்), யூட் சதீஸ்குமார் (முகாமைத்துவ உதவியாளர், சுகாதார அமைச்சு, யாழ்ப்பாணம்), டன்ஸ்ரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், யூடிற் ஏஞ்சலின், அபிநயன், அபினேஷ், அகிலாஸ், அஸ்னி (கனடா), அடம் (கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.09.2022) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் உடுவிலிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு 3/1 றக்கா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0773913766**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாறவேண்டும் மனங்கள்

இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை ஏற்க மறுத்துள்ளது. ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் இது வழமையான ஒன்று. ஆனால், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சிக்காலத்தில் ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி காலம் கடத்தியது. இந்தமுறை ரணில் –ராஜபக்ச என்ற புதிய கூட்டு ஆட்சியிலும், ராஜபக்சக்களின் நிலைப்பாடே தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்தை ஏற்கமாட்டோம் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொள்ளமாட்டோம் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலங்கையின் நிலைப்பாட்டை ஜெனிவாவில் எடுத்துரைத்துள்ளார். அவர் இதன்போது ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். 'மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அர்த்தமுள்ளதாகவும் நிலைபேறானதாகவும் அமைய வேண்டுமானால், அவை சம்பந்தப்பட்ட நாட்டின் அனுமதியுடனும் அந்நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாகவும் அடிப்படை சட்டக்கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் . இதுவே இலங்கையின் நிலைப்பாடு' என்று அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் உண்டு. 'தமக்கு வந்தால் இரத்தம், மற்றவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னி' என்ற விதத்திலேயே இலங்கை அரசாங்கத்தால் சகல விடயங்களும் அணுகப்படுகின்றன. அதனால்தான், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையானது, நாட்டின் (இலங்கையின்) அனுமதியுடன் விடயங்களைச் செயற்படுத்த வேண்டும் என்று செப்பியிருக்கிறார் சப்ரி.

இலங்கைக்குள் ஆட்சியாளர்கள் எப்படி நடந்து கொள்கின்றார்கள்? இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பு, நாட்டின் அனைத்து இனக் குழுமத்தின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டதா? இந்த நாட்டில் சிறுபான்மையின மக்கள் – ஒரு தேசிய இனத்தின் வெறுப்புக்கு மத்தியில் – பலவந்தமாக திணிக்கப்பட்டதே தற்போதைய அரசமைப்பு. இந்த நாட்டில் காலத்துக்குக் காலம் பல்வேறு சட்டங்கள், ஓர் இனக் குழுமத்துக்கு எதிராக, அவர்களை ஒடுக்கும் வகையில் அரசாங்கங்கள் கொண்டுவந்திருக்கின்றன. அவை ஒவ்வொரு சட்டங்களையும் முன்வைக்கும்போது அந்த இனக்குழுமங்களின் அபிலாஷைகள், விருப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்தினார்களா? இல்லவே இல்லை. அடக்கி ஆள்வதற்கு ஏதுவாக, சிறுபான்மையினரின் அபிலாஷைகளைப் புறம் தள்ளியே அரசாங்கங்கள் செயற்பட்டன. அவ்வாறு செயற்பட்டதன் விளைவாகே நாட்டில் போர் மூண்டது. அந்தப் போரினாலேயே இன்று இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் நிற்கின்றது. அங்கு நின்று கொண்டு தனக்கு எதிரான தீர்மானத்துக்கு நியாயம் வேறு பிளக்கிறது.

நல்லிணக்கம் அல்லது மனித உரிமை தொடர்பில் முன்னேற்றம் என்பது வெறும் தீர்மானத்தால் வந்துவிடப்போவதில்லை என்பது உண்மை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது ஒரு நாட்டுக்கு அழுத்தம் கொடுக்கும் பலமான தளமும் அல்ல. குறித்த நாடு இணங்கிச் செயற்படும்போதுதான் விடயங்களை ஒப்பேற்ற முடியும். ஆனால், இலங்கை ஒருபோதும் ஜெனிவாவுடன் இணங்கப்போவதில்லை. அவ்வாறு இணங்காத இலங்கையால் நாட்டில் நல்லிணக்கத்தையோ அல்லது மனித உரிமை முன்னேற்றத்தையோ காண்பிக்கவும் முடியாது. இலங்கையில் உண்மையில் மாற்றம் வரவேண்டுமாக இருந்தால் ஆட்சியாளர்களின் மனங்களில் மாற்றம் வரவேண்டும். அது ஒருபோதும் நடக்கப்போவதில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"நீ கவலைகளைச் சுமந்து கண்ணீர் சிந்துவதைவிட. இலட்சியங்களைச் சுமந்து இரத்தம் சிந்து, உலகம் உன்னைப் போற்றும்" - **லெனின்**



# வெளியகப் பொறிமுறையை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

### *ஜனாதிபதி ரணிலின் நிலைப்பாடும் இதுதான் என்கிறார் பேச்சாளர்*



**கொழும்பு, செப். 14**

**வெளியக பொறிமுறையை ஏற்பதில்லை என்பதுதான் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். அதனையே வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் அறிவித்தார். - இவ்வாறு பதில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, "ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், வெளியகப் பொறிமுறையை நிராகரித்துள்ளார். ஆனால், நல்லாட்சியின்போது இணை அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்தில் கலப்பு பொறிமுறை இருந்தது. அப்போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். தற்போது அவர் ஜனாதிபதியாக இருக்கின்றார். வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்பு அரசாங்கத்தின் நிலைப்பாடா?" என்ற தொனியில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரமேஷ் பத்திரண இவ்வாறு கூறினார்.

"வெளியகப் பொறிமுறையை நாம் ஏற்கப்போவதில்லை. அது எமது அரசமைப்புக்கு முரணான செயல். எமது அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் உள்ளகப் பொறிமுறை ஊடாகவே நடவடிக்கை இடம்பெறும். எமது ஜனாதிபதி, அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுதான். அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டையே வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்" - எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-44)

# ஐ.எம்.எப். உடன்படிக்கை பகிரங்கப்படுத்தப்படும்

கொழும்பு, செப். 14

சர்வதேச நாணய நிதியத்துடன் (ஐ.எம்.எப்.) எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை. கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் - இவ்வாறு பதில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"எந்தவொரு ஒளிவு மறைவும் இல்லை. அமைச்சரவை, கோப்குழு, கோபா குழு உட்பட நிதி தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய அனைத்து நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு உடன்படிக்கைகள், உரிய நேரத்தில் வழங்கப்படும்" எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-44)

நாளை
15.09.2022
வியாழக்கிழமை
ஆவணி 30

சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம்: 01.33 - 03.03

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் கடலட்டைப் பண்ணைகள் வாழ்வாதாரம் இழக்கும் மீனவர்கள்

## கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 14

தீவகத்தில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்பட்டால் எமது மீன்வளம் இல்லாமற்போவதுடன் களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்கள் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழக்கும் துர்ப்பாக்கியம் ஏற்படும் என ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சி. சிவச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகப் பகுதிகளில் கடலட்டைப் பண்ணைகளை உருவாக்குவதற்கான இடங்கள் சீன நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் கடலட்டைப் பண்ணை அமைக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் நாட்டின் வளங்களை விற்று இலாபமீட்டுவது குறித்து சிந்திப்பதால் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குகின்றது.

தீவகத்தில் கடலட்டைப் பண்ணை அமைக்க அனுமதிக்கும்போது அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடாமல் அனுமதிக்கப்படுவது சட்டவிரோதமானது.

> “அரசாங்கம் நாட்டின் வளங்களை விற்று இலாபமீட்டுவது குறித்து சிந்திப்பதால் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குகின்றது. களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்களது வாழ்வாதாரம் இழக்கப்படும்.”

கடல் தொடுவாய்களை மறைத்து கடலட்டைப் பண்ணைகள் கட்டப்படுவதனால் மீன்வரத்து குறைவடையும். இதனால் எமது மீன்வளம் அழிக்கப்படும். அத்துடன் களப்பு கடலை நம்பி தொழில் செய்பவர்களது வாழ்வாதாரம் இழக்கப்படும். செயற்கை தொழில்களால் இயற்கை தொழில்கள் தீவகத்தில் பாதிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.


இன்னொரு நாட்டிடம் எமது வளங்களை விற்று கையேந்த வேண்டிய அவசியமில்லை. இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடம் பலமுறை முறையிட்டபோது அதையும் மீறி கடலட்டைப் பண்ணை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, இதனை உடன் தடுத்து நிறுத்தி எமது மீன்வளம் மற்றும் மீனவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம் -என்றார். (ச-27)

# சுண்ணாம்புக்கல் அகழ்வு சந்தேகநபர் கைதானார்!

பலாலி மருதடிப் பகுதியில் சட்டவிரோதமாக சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாலிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார், சந்தேகத்துக்கு இடமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் கனியவளங்கள் சுரங்க அகழ்வுப் பணியகத்தின் அனுமதியின்றி, டைக்கோ வாகனம் மூலம் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அத்துடன், கைப்பற்றப்பட்ட டைக்கோ வாகனம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-14-23)



# மனித உரிமை சார் அலுவலகம் உடைத்து ஆவணங்கள் திருட்டு

மன்னார், செப். 14

மன்னார், சாவக்கட்டு பகுதியிலுள்ள மனித உரிமைகள் சார்ந்த மற்றும் பாதிக்கப்பட்டுவரும் மக்கள் சார்பில் இயங்கிவரும் 'பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின்' அலுவலகம் உடைக்கப்பட்டு முக்கியமான ஆவணங்கள் திருட்டுப்போயுள்ளன என நிறுவன இணைப்பாளரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது முக்கியமான ஆவணங்கள் அடங்கிய கமரா மற்றும் பென்ரைவ் ஆகியவையே இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-60)

# பிரமிட் முதலீட்டுத் திட்டம் 800 கோடி ரூபா மோசடி

## ஐவருக்கு பயணத்தடை

கொழும்பு, செப். 14

பிரமிட் முதலீட்டுத் திட்டமென்ற பெயரில் சுமார் 800 கோடி ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் 5 பேருக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் பயணத்தடை விதித்துள்ளார்.

மஹரகம, குருநாகல், பொல்பித்திகம, கிரிபாவ மற்றும் நிகவெரெட்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளனர் எனக் குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த நபர்கள் டிசெம்பர் 5ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# வலி.மேற்கு பிரதேசத்தின் சுகாதாரக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 14

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் சுகாதாரக் கலந்துரையாடலை, வலி.மேற்கு பிரதேசசபையின் கலாசார மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தல், உணவு கையாளும் நிறுவனங்கள் தொடர்பான விடயங்கள், அலுவலகங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பராமரிப்பு, மழைதண்ணீர் சேகரிப்பு தொட்டிகளை உருவாக்குதல் போன்ற முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

வலி.மேற்கு பிதேசசபையின் தவிசாளர் நடனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பாதுகாப்புத் தரப்பினர், சுகாதாரப் பிரிவினர், சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட விற்பனை நிலையங்கள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-14-125)

# புனித அன்னை வேளாங்கன்னி ஆலயத்தின் வருடாந்த திருவிழா

கிளிநொச்சி, செப். 14

கத்தோலிக்க மக்களின் புனித யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அத்துடன், எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14-9)

# நூலியலாளர் செல்வராஜாவின் 'நூல் தேட்டம் – 16' வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 14

ஈழத்துப் பதிப்பிலக்கிய பரப்பில் நூலகவியலாளராக அறியப்பட்ட நூலியலாளர் என். செல்வராஜாவின் 'நூல் தேட்டம் 16', 'நூலகவியல் பெருந்தொகுப்பு', 'நான்கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்' ஆகிய புத்தகங்களின் அறிமுகமும் வெளியீடும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூலியலாளர் என். செல்வராஜா ஈழத்து புத்தகங்கள் பற்றிய விவரங்களை சர்வதேச நியமங்களின்படி தொகுத்து 'நூல்தேட்டம்' என்ற பெயரில் வெளியிட்டு வருகிறார்.

இதுவரையில் 15 தொகுதிகள் வெளியிடப்பட்ட நிலையில் இப்போது 16ஆவது தொகுதி வெளியாகின்றது. ஒவ்வொரு தொகுதியிலும் 1000 புத்தகங்களின் விவரங்கள் பதியப்பட்டுள்ளன.வலி. தெற்குப் பிரதேசசபை தவிசாளர் க.தர்ஷனின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# இலவச தையல் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், செப்.14

உதயவாழ்வு சமூக மேம்பாட்டு மையத்தால் வட்டுக்கோட்டை இணைச்செயலகத்தில் வருடாவருடம் நடத்தப்படும் இலவச தையல் பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

6 மாத கால இந்தப் பயிற்சிநெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் வட்டுக்கோட்டை அத்தியடி பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள உதயவாழ்வு இணைச்செயலக காரியாலயத்தில் காலை 9.30மணி முதல் மதியம் 1.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 12 . 1945



மறைவு
05 . 09 . 2012

# அமரர் நல்லதம்பி மகாராசா

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - அப்பா
இன்னும் சில காலம் எங்களோடு வாழ மறந்ததேன் அப்பா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டுகள் பத்து உருண்டோட
எங்கள் மனம் அப்பாவை தேடி நிற்கிறது துவண்டு நிற்கின்றோம்.
எம் வாழ்வுப் பாதைக்கு ஒளியூட்டிய
எங்கள் அன்பு அப்பாவின் பாதம் தொட்டு
ஆயிரம் வணக்கங்கள்.

ஏழாலை,
கனடா,
லண்டன்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 14 . 03 . 1952



இறப்பு 15 . 08 . 2022

## அமரர் சோமு சிவஞானம்

(ஓய்வுபெற்ற வளிமண்டல ஆராய்ச்சி திணைக்கள ஊழியர், முன்னாள் மேக்கன்ரைல் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (16.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கோணவாளை,**
**வசாவிளான்.**

**குடும்பத்தினர்.**
**077 882 0262**


# ENGLISH CLASSES

**Spoken English with Grammar**

- மாணவர்கள்
- தொழில் தேடுவோர்
- வெளிநாடு செல்ல விரும்புவோர்

அனைவருக்குமானது
அடிப்படையிலிருந்து முழுத் தமிழ்
விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

Contact - 077 311 6202
Kumarasuamy Lane. Puttur East, Puttur.


# தேவை

Abans வாடிக்கையாளர் சேவை நிலையத்திற்கு மாதாந்த வாடகைக்கு Single cap, Three wheelar தேவை.

0760828651,0772290130,0772023220


# இதய அஞ்சலி

மலர்வு 07 . 09 . 1948



உதிர்வு 13 . 09 . 2022

சிவபூமி அறக்கட்டளையின் நிதிப்பொறுப்பாளரும், எமது அறக்கட்டளையின் வளர்ச்சிக்கு அயராது பணியாற்றியவரும் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் **அதிபர் திருமதி**
**கலைவாணி குகதாசனின்** கணவருமாகிய
**கண்வைத்தியநிபுணர் Dr. ச.குகதாசன்**
நேற்று (13.09.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை.**

(cs.20756) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 09 . 1948



இறப்பு 13 . 09 . 2022

## Dr.சரவணமுத்து குகதாசன்

(கண் சத்திர சிகிச்சை நிபுணர்)

நெட்டிலிப்பாய் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட Dr.சரவணமுத்து குகதாசன் நேற்று (13.09.2022) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நல்லம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரராமலிங்கம் - கமலராணி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைவாணி (அதிபர் - சிவபூமி பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், லிஷாயினி, ஷஞ்ஜீவா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நிதர்சன், கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், Dr. பாலச்சந்திரன், சுந்தரேஷ்வரி, மகேஷ்வரி, சிவநேசன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி, காலஞ்சென்ற M.P.கணேஷன் மற்றும் ஸ்ரீபதி, நிர்மலாஜினி, காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சுமதி, கஜராம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஷஜிகன், ரேஷிகா, லக்ஷ்மிதா, பிரதிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"துவாரகை"**
**ஞான வைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(cs20755) (2.6)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25.06.1949

14.09.2022

மறைவு 27.08.2021

## அமரர் Dr.நாகரத்தினம் விமலகாந்தன்

எம் நிழல் போல் இருந்தவர் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள்! கண் இமைக்கும்
நேரத்தில் கண்ணீர் துளியாக்கினீர்கள்
உங்கள் சிரித்த அழகுமுகம் கண்டு ஓராண்டு
ஆனதுவோ! எம்மை அன்புடன்
அழைக்க நீங்கள் இங்கு இல்லாது பரிதவிக்கின்றோம்
நாம்! எமக்கு ஆற்றும் வழி தேடுகின்றோம்.
ஆனாலும் ஆறவில்லை எம் இதயம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் அழியாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்
என்றென்றும்

**பரித்செம்மணி வீதி,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

*நினைவுகளுடன்*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் நினைவு வாரத்தில் முன்னணியால் ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம், செப். 14

தியாகதீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியின் ஏற்பாட்டில் ஊர்திப்பவனியொன்று இடம்பெறவுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காக ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி உயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவுதினம் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அதனையடுத்து, தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி, இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி, அரசியல்கைதிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, பௌத்தசிங்கள மயமாக்கலை நிறுத்து உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியினரால் ஊர்திப்பவனி இடம்பெறவுள்ளது. (ச-இ)




## பெயர்மாற்றம்

சிவனையா சிவனம்மாள் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை சிவா சிவராணி என மாற்றம் செய் வதோடு இனிவரும் சகல ஆவணங்க ிலும் சிவராணி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்


## மாட்டை இறைச்சியாக்கிய நபர்கள் தப்பியோட்டம்

மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிய நபர்கள் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பாட்டிப் பகுதியில், நேற்று முன்தினம் மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிக் கொண்டிருக்கின்றனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதற்கமைய குறித்த பகுதிக்கு சிவில் உடையில் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார், 35 கிலோகிராம் இறைச்சியை மீட்டனர். ஆயினும் இதன்போது சந்தேகநபர்கள் தப்பிச்சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்வதற்குரிய விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஓ-14-23)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.08.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது கனிஸ்ரபுதல்வி

அமரர் **உதயச்சந்திரன் தேனுஷா** (தேனு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (12.09.2022) திங்கட்கிழமை காலை 7.00 மணிய ளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.09.2022 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆனந்தகானம்
ஊரெழு கிழக்கு.

(cs. 20754) (2.6)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1943



மறைவு 12 . 09 . 2022

### நாகமுத்து குமாரசாமி (பொன்னர்)

காளி கோவிலடி மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து குமாரசாமி அவர்கள் 12.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் கந்தசாமி, அமரர் கணேஸ், அமரர் தங்கம்மா மற்றும் பாலசிங்கம் (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜிதா, அமரர் பிரதீபன் மற்றும் கிரியா, அஜந்தா, வஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன், இளங்கோ, கவிதாஸ், துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்விகன், அரோசன், அஸ்மிதா, இஜயா, தனுயா, பானுயன், யனோசிகன், நிவ்ஜா, லக்ஸ்சிகன், அவந்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2022) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன், மல்லாகம்
0766545220

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1998



மறைவு 13 . 09 . 2022

### சிவகுமாரன் நிருத்திகா

572/1. கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவகுமாரன் நிருத்திகா அவர்கள் நேற்று (13.09.2022) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சிவகுமாரன் தமிழ்ச்செல்வி தம்பதியரின் அன்பு மகளும் நிவேதிகா, மயூரன், மகினன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வல்லிபுரம் பூமணி, கமலநாதன் மற்றும் இராசமலர் ஆகியோரின் பேர்த்தியும் ஜெயக்குமார், உதயகுமார், சந்திரகுமார், ரஜனிகுமார், சியாமளா, பிறேமினி, கலைச்செல்வி, மஞ்சுதாகினி ஆகியோரின் பெறாமகளும் கனகலிங்கம், வினோத், அஜந்தன், யாழினி, நிஷாந்தி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0774895764

தகவல் : குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

மட்டுவில் வடக்கு பிரிவு கிராம அலுவலர்
திருமதி பானுஜா தெய்வேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி பாக்கியம் மகாலிங்கம்



அவர்கள் 12.09.2022 அன்று
இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால்.
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

- மட்டுவில் வடக்கு. கண்ணகை சனசமூக நிலையம்
- மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக் கழகம்
- மட்டுவில் வடக்கு. கண்ணகை முன்பள்ளி
- மட்டுவில் வடக்கு. கமக்கார அமைப்பு
- மட்டுவில் வடக்கு. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
- வரையறுக்கப்பட்ட கிராம சக்தி மக்கள் இயக்கம்.

## காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

**இடம் :-** காரைநகர் அபிவிருத்திச்சபை நூலகம். பிரதான வீதி.புதுறோட் சந்தி. காரைநகர்

**காலம் :-** 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :-** மு.ப 10.00மணி

**தலைமை :-** திரு.இராமநாதன் சிவசுப்பிரமணியம்

**குறிப்பு :-**

1. 25.09.2022ஆம் திகதி வரை எமது சபையில் இணைந்த ஆயுட்கால உறுப்பினர்கள் மற்றும் 2022ஆம் ஆண்டுச்சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் மட்டுமே மேற்படி கூட்டத்தில் பங்குபற்ற முடியும்.
2. பிரேரணைகள் இருப்பின் 25.09.2022ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும்.
3. அலுவலகத்தில் பெயர் குறிப்பிட்டு எழுத்து மூலம் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் மட்டுமே பொதுக்கூட்டத்தில் கலந்துரையாடப்படும்:
4. எமது சபையின் 11.08.2019 ஆம் திகதி தொடக்கம் 31.07.2022 வரையான கணக்காய்வு அறிக்கைகள். செயற்பணி அறிக்கை மற்றும் எதிர்வரும் பொதுக்கூட்ட நிகழ்ச்சிநிரல் ஆகியவற்றை அலுவலக நேரத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம். .

**அலுவலக தொ.பே.இல :**
**021 221 1757, 077 9778784**

**சுப்பிரமணியம் செந்தூரன்**
**செயலாளர்**

## நான்காம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில்
04 . 03 . 1934



ஆண்டவன் அடியில்
14 . 09 . 2018

அமரர் திருமதி

### சவேரியாப்பிள்ளை பிலிப்பு

அன்பும் கனிவும் கொண்ட
அன்பு நிறை அம்மாவே
நின் அன்பான முகம் கண்டு
நான்கு ஆண்டுகள் ஆகிறதே
நின் அன்பான செயல்களும்
கனிவான வார்த்தைகளும்
எம் நெஞ்சமதில் நிழலாடுகின்றன.
நீங்கள் எமக்குச் செய்த
தன்னலம் கருதாத தியாகங்களை
நெஞ்சமதில் நன்றியுடன் நினைக்கின்றோம் இந்நாளில்
நித்தமும் உங்கள் நினைவு எம்முடனே
என்றும் நிலைத்து நிற்கின்றது.
நின் ஆன்மா இறைவனில் அமைதி பெற
இறையருள் வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி.
கொடிகாமம்.

மாறா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## வாடகை அடிப்படையில் இரண்டு வாகனங்களை (Van) பெற்றுக்கொள்வதற்கான கேள்வி விலை கோரல் கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,

வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம். மற்றும் வவுனியா பிரதம எந்திரி அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு 01.08.2012ற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் (Van) இரண்டினை வாடகை அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக 02.09.2022ஆம் திகதி இப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட பெறுகை ஆவணங்களைப் பெற்று சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 23.09.2022ஆந் திகதி பிற்பகல் 03.00 மணிவரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

மாகாணப் பணிப்பாளர். கட்டடங்கள் திணைக்களம். வட மாகாணம் - 0212228091 பிரதம எந்திரி அலுவலகம். கட்டடங்கள் திணைக்களம். கண்டி வீதி. வவுனியா - 0242222284

**தலைவர்,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**வட மாகாணம், கடற்கரை வீதி, குருநகர்.**

(cr.36268) (2.6)

## மரண அறிவித்தல்

### செல்வி றிச்சட் றேமன் மேனுஜா



மலர்வு
30.01.2002

உதிர்வு
10.09.2022

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றிச்சட் றேமன்-ஜெலஸ்ரீனா ஆகியோரின் அன்பு மகளாகிய செல்வி மேனுஜா 10.09.2022 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் ஆன்ம இரங்கல் திருப்பலி இன்று (14.09.2022) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கமக்காரர் அமைப்பின் காலபோக கூட்டம்

கைதடிதெற்கு மற்றும் கைதடிதென்கிழக்கு கமக்காரர் அமைப்பின் காலபோகக் கூட்டம், கைதடி இணுங்கித்தோட்ட கந்தசாமி கோயில் அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. என்வே, கூட்டத்தில் கைதடி தெற்கு மற்றும் கைதடி தென்கிழக்கு கமக்காரர் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கமக்காரர் அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-14,288)

## காணி தேவை

**சாவகச்சேரிக்கும் இயக்கச்சிக்கும் இடையில் 1ஏக்கர் அல்லது 2 ஏக்கர் காணி தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்**

**0773653989**

## மரண அறிவித்தல்

பிறப்பு
02 - 06 - 1943



இறப்பு
13 . 09 . 2022

### செல்வராஜா அழகேஸ்வரி

யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா அழகேஸ்வரி நேற்று (13.09.2022) காலமானார். அன்னார் தாமோதரம்பிள்ளை தில்லையம்மா தம்பதியரின் புதல்வியும். காலஞ்சென்ற செல்லத்துரை தங்கரத்தினம் தம்பதியரின் மருமகளும் செல்வராஜாவின் அன்பு மனைவியும் சந்திரவதனா(பிரான்ஸ்). சாந்தினி(சுவிஸ்). ஜெயந்தினி(கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை - ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராஜா (பிரான்ஸ்). கமலேஸ்வரன் (ஆனந்தி. சுவிஸ்). இரத்தினகோபால் (கிராம அலுவலகர் - கொக்குவில் வடகிழக்கு J/121) ஆகியோரின் அன்பு மாமியாரும் முரளி. ஜஸ்வினி. தர்ஷிகன். ஜாதவன். லக்ஷ்மிகன். சஞ்சுகன். சஜீவ். ஜதுர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் அதர்வாவின் அன்பு பூட்டியும் காலஞ்சென்ற கனகேஸ்வரி. காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் கைலைநாதன். இராமநாதன். தில்லைநாதன். காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சர்வேஸ்வரி. அற்புதநாதன். ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2022) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
ஜெயந்தினி

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி . சரஸ்வதி பாலகிருஷ்ணன்

மலர்வு : 09 . 01 . 1932 உதிர்வு : 13 . 09 . 2022

அன்னார் அளவெட்டி வடக்கு கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும். கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி பாலகிருஸ்ணன் அவர்கள் 13.09.2022 செவ்வாய்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலம் சென்ற கிருஸ்ண -பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும். காலம் சென்ற பாலகிருஸ்ணன் (Area Manager Singer ) அவர்களின் அன்பு மனைவியும். காலம் சென்ற மங்கையற்கரசி. காலம் சென்ற நாகபூசனி. மீனா. அவர்களின் அன்புச் சகோதரியுமாவார். இவர் சௌந்தரராஜன் அவர்களின் அன்புத் தாயுமாவார். சுமதி அவர்களின் மாமியும். மாலினி. ஜமுனா. ஜெயந்தா. கஜேந்திரா. குகேந்திரா. மகேந்திரா அவர்களின் சிறிய தாயாரும். சீவகன் அவர்களின் பெரிய தாயாரும். லிதுசன். சேனுசன். அவர்களின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 14.09.2022 புதன் கிழமை அன்று கல்கிசை ( MAHINDA ) மகிந்த மலர்ச் சாலையில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின் ஈமக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும்.ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

சவுந்தரராஜன் - வவுனியா : 077 6148011
மீனா - கொழும்பு : 076 9368417
குகேந்திரா ( லண்டன் ) : +44 7725949041

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கா...

சர்வதேச மன்னிப்புசபை, போரம் ஏசியா, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு ஆகியவையே இவ்வாறு வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, சர்வதேச சட்டத்தின்கீழ் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பான, தற்போதைய ஆணைகளை வலுப்படுத்தும் மற்றும் நாட்டின் சீரழிந்து வரும் மனித உரிமை நிலைமைகளைக் கண்காணிக்கும் வகையில் வலுவான தீர்மானத்தை முன்மொழிந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள இந்த அமைப்புக்கள், இந்தத் தீர்மானத்தை பேரவையில் நிறைவேற்றவேண்டுமென்று பேரவையின் உறுப்பு நாடுகளிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்துவது உட்பட, நடப்பு துஷ்பிரயோகங்களுக்குத் தீர்வு காணவும் சிறிலங்காவுக்கு இந்தத் தீர்மானத்தின்மூலம் அழைப்பு விடுக்கவேண்டுமென்று இந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் கடந்தகால சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகளாக நீதியைக் கோரி வருகின்றனர். ஆனால், அடுத்தடுத்த அரசாங்கங்கள் வாக்குறுதிகளை மீறி, பொறுப்புக் கூறலைத் தடுத்து, போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை உயர் பதவிக்கு உயர்த்தியுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, பொறுப்புக் கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையில், சிறிலங்கா மீது அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை - பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்தல், இடைக் காலத்தில் அதன் பயன்பாட்டுக்கு உடனடித் தடை விதித்தல், சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்தல், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படாத குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்காத அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பணிப்பாளர் யாமினி மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார்.

உறுப்புநாடுகள் சிறிலங்காவுக்கு அதன் உறுதிப்பாடுகள் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் மற்றும் நடப்பு துஷ்பிரயோகங்களை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் யாமினி மிஸ்ரா வலியுறுத்தியுள்ளார். (அ-எ-இ)

## மாவட்ட...

மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் மாயாதுன்னே அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதம் மாவட்டச் செயலகங்களுக்கு நேற்று கிடைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமையால் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும் வரை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை நடத்திச் செல்வதற்கான இயலுமை காணப்படுவதில்லை.

ஆகையால், ஜனாதிபதியால் புதிய மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டதன் பிற்பாடு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறியத்தருகின்றேன்.

அத்தோடு, புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்படும் புதிய ஆலோசனைகளின்படி, அவர்களின் எரிபொருள் செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ-5)

## ரயிலுடன்...

வவுனியா, ஈஸ்வரிபுரத்தைச் சேர்ந்த மைக்கல் தினகரன் (வயது-44) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடனேயே இவர் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-110)

## புளியங்குளத்தில்...

புளியங்குளம் பாடசாலைக்கு முன்பாக இந்த விபத்து நடந்துள்ளது. வவுனியா நகர்ப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனமொன்று, எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதாலேயே இந்த இடர் நிகழ்ந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## பால்...

இந்தச் சோகம் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த குடும்பமொன்றுக்கே நேர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி பிரசவம் நடந்த நிலையில், தாயும் சிசுவும் மருத்துவமனை விடுதியில் தங்கியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் பால் கொடுத்து விட்டு தாய் அந்தப் பெண் சிசுவை உறங்க வைத்துள்ளார். இரவு 9 மணியளவில் சிசு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

பால் புரையேறியே சிசு உயிரிழந்துள்ளது என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26-125)

## கட்டுப்பாடு...

இந்தச் சம்பவம் நேற்று மாலை ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு எல்வி சந்தியில் நடந்துள்ளது.

பெரியசாமி ராஜ்குமார் (வயது-32) என்பவரே உயிரிழந்துள்ளார்.



உழவு நடவடிக்கைக்காக உழவியந்திரத்தைச் செலுத்திச் சென்றபோது, அது கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதில் படுகாயமடைந்த ராஜ்குமார் அந்தப் பகுதியில் இருந்தவர்களால் மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ -எ-19)

## பயங்கரவாதச்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்காவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் நிலையில், அதற்குப் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன. அதையடுத்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் "பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சிறிலங்கா கொண்டுவரும்" என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தால் 1947ஆம் ஆண்டு 25ஆம் இலக்கச் சட்டமாகக் கொண்டுவரப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்காமல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயரை மாற்றி தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டத்தைக் கொண்டுவர உத்தேசித்துள்ளமை பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு புதிய பெயர் வைப்பதே தவிர வேறு எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்று மாற்றப்பட்டு சட்டவரைவுகள் நிறைவடைந்திருந்த நிலையில், 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் மிக மிக மோசமானதும், கொடூரமானதுமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரை மட்டும் மாற்றிவிட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவர முயற்சிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் நிச்சயமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிடவும் மோசமானதாக இருக்க வாய்ப்புள்ளது.

சர்வதேசத்தை சிறிலங்கா ஏமாற்ற முயற்சிக்கும் அதேநேரம், அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க முடியாதவாறு பாதுகாப்பு மிக்க பலமான அரணை நிறுவிக்கொள்ள முயற்சிக்கின்றது - என்றுள்ளது. (அ-எ-இ)

## கட்சிகளிடையே...

விடத்துக்கு அருகே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களுக்கும், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் சார்புடையோருக்கும் இடையிலே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இரு தரப்பினரும் முரண்பட்டு, தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் ஒரு தரப்பை மற்றைய தரப்பு ஒளிப்படங்கள், காணொலிகள் எடுத்துக்கொண்டது என்றும், வேறு சில குழுக்களும் அங்கு வந்து தாக்கத்தில் ஈடுபட்டன என்றும் அங்கிருந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், மணிவண்ணன் சார்பு அணியினரும் அந்த இடத்தில் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. இதுவே இரு தரப்புகளுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனிடம் கேட்டபோது; "தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் கடந்த சில ஆண்டுகளாக நாமே நினைவேந்தலை நடத்தி வருகின்றோம். இந்த முறையும் அங்கு நினைவேந்தல் நடத்துவதற்கான கொட்டகையை அமைத்துள்ளோம். அங்கு வந்த மணிவண்ணன் சார்புடையவர்கள், அந்த இடத்தில் கொட்டகை அமைக்கவேண்டாமென்று தடுக்க முயன்றனர். அந்த இடத்தில் தாங்கள் நினைவேந்தல் நடத்தப்போகின்றோம் என்று முரண்பட்டனர்.

பொலிஸார் மற்றும் இராணுவக் கெடுபிடிகளால் கடந்த சில ஆண்டுகளாக யாரும் நினைவேந்தலை நடத்த முன்வரவில்லை. நாமே நினைவேந்தலை நடத்தியிருந்தோம். கடந்த ஆண்டு அதற்காகக் கைது செய்யப்பட்டோம். இவ்வாறு இருக்கையில் திடீரென வந்தவர்கள் நாம் வழமையாக நினைவேந்தல் செய்யும் இடத்தில் நினைவேந்தல் செய்வதைத் தடுப்பது முறையற்றது "என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபனிடம் கேட்டபோது; "நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் திலீபனின் நிரந்தர உருவப் படத்தை அமைத்து அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த இடத்தில் கொட்டகை அமைத்ததாலேயே முரண்பாடுகள் ஏற்பட்டன" என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்காக பன்னிரு நாள்கள் உணவு தவிர்த்து தனது உயிரை ஈந்த திலீபனின் தியாகத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் நடந்து கொள்கின்றனர் என்று சம்பவ இடத்தில் இருந்த பொதுமக்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

உணர்வெழுச்சியுடன் நடத்தப்பட்ட வேண்டிய நிகழ்வுகளில் அரசியலைப் புகுத்தி சுயலாபம்தேட அரசியல்வாதிகள் முயலக்கூடாது. இவ்வாறான செயற்பாடுகளை அரசியல் கட்சிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினர். (அ-எ-7-26)

## கலை...

கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், ஆலயத்தில் கலை ஆடும் ஒரு பூசகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்று சோதனையிடப்பட்டது என்றும், அங்கிருந்த 11 வாள்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் ஒரு பூசகர் என்றும், அவர் ஆலயத்தில் கலை ஆடுபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-125-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய உதைபந்தாட்டப் போட்டிக்கு

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மூன்று அணிகளும் தெரிவு

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய உதைபந்தாட்டப் போட்டிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மூன்று அணிகளும் தகுதி பெற்றுள்ளன.

16 வயதுப்பிரிவின் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி மோதியது. அதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியுடன் மோதியது. இதில் இரு அணியினரும் குறிக்கப்பட்ட நேரத்தில் கோல் எதையும் பெறவில்லை. அதன்பின்னர் வழங்கப்பட்ட பனால்டி மூலம் சென். ஹென்றிஸ் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 20 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து மன்னார் சென். சேவியர்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியை சுட்டியது. இந்த நிலையிலேயே சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மூன்று பிரிவு அணிகளும் தேசியப் போட்டிக்குத் தகுதி பெற்றன. (ஒ-14)




## நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்பினரைத் தண்டியுங்கள்

*ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, செப். 14

நாட்டை வங்குரோத்து நிலைக்குள்ளாக்கியவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால் நாட்டு மக்கள் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். பிள்ளைகளுக்கு ஒருவேளைகூட உணவளிக்க முடியாத நிலையில் பெற்றோர் தவிக்கின்றனர். மக்களின் நாளாந்த வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவால் தெரிவிக்கப்பட்ட எந்த நிவாரணமும் மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய தரப்பினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. நாட்டை வங்குரோத்து அடையச் செய்தோருக்கு அமைச்சுப் பதவி வழங்குவது பைத்தியக்காரத் தனம். அவர்கள் தண்டிக்கப் படவேண்டும் - என்றார். (ச-இ)


**பணியாளர்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 5511

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபரப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606, 077 911 6983

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999, 076 4365 814, 077 8748 135

**தேவை**

பணம் வசூலிப்பவர், கூலியாட்கள், மில் உபகரணங்கள் தேவை.
இல.15 4ம் ஒழுங்கை பிறவுண் வீதி
0777722215

**பதிவுகள் இலவசம்**

எம்மிடம் சகல தரப்பினதும் ஜாதகங்கள் உண்டு. 4 இல் செவ்வாய் கிரகபாவம் 25 உத்தரடம் 1ம் பாதம் BAC பட்டதாரி (இலங்கை வங்கி - காசாளர்). எதிர்பார்ப்பு பட்டாதாரி (வேலையுடன்) மணமகள்

ஐயனார் வீதி, சண்டிலிப்பாய்
துரை திருமண சேவை
077 656 8282

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் உள்ள மருத்துவர் வீட்டொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
076 128 3990

**வேலை வாய்ப்பு**

நெல்லியடியில் இயங்கும் புடவை கடைக்கு முன் அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை
0777852840

**சிங்கள (இரண்டாம்மொழி) வகுப்புக்கள்**

ஆரம்பம் : யாழ். கச்சேரி அருகில்

- திங்கள் - 8.30 காலை
- புதன் - 8.30 காலை
- வெள்ளி - 8.30 காலை
- சனி - 3.00 மாலை

பேச்சுச் சிங்களம் O/L வகுப்புகள்
ஆசிரியர்: திரு. தென்னக்கோன்
தொடர்பு: 077 666 0400

**DTPE CAMPUS**

**2022 - செப்டெம்பர் மாதத்திற்கான பட்டப்படிப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**B.A in English (Final year entry)** கால அளவு:- 1 வருடம், நுழைவுத் தகைமை :- HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.B.A - Bachelor of Business Administration** | **B.Sc in IT**
கால அளவு:-1 வருடம், நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.Sc in Civil Engineering** கால அளவு:-1 வருடம், நுழைவுத் தகைமை: HND /Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 5 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**M.B.A - Master of Business Administration** கால அளவு:-1 வருடம்
நுழைவுத் தகைமை : Any Bachelor Degree அல்லது முகாமைத்துவத் துறையில் 10 வருட அனுபவம்.

**நேரடி மற்றும் Online வகுப்புக்கள்**

✓ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்ட கற்கைநெறிகள்.
✓ அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

தொடர்புகளிற்கு 0775438086, 0770288711
No. 925, K.K.S Road, தட்டாத்தெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
வலைத்தளம் : www.dtpecampus.edu.lk
தொலைபேசி இல : 021 468 0964, 077 028 8711, 077 543 8086


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.